**DEPOSITION OF WITNESS**
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.95/2025 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | சசிகலா |
| *Father/Husband's Name* | க/பெ. சுரேஷ் |
| *Village* | மன்னுர்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 32 |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 07.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வீட்டுவேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன சுரேஷ் என்பவர் எனது கணவர் ஆவார்.

கடந்த 23.04.2023 ம் தேதியன்று மாலை 04.30 மணியளவில் நானும், எனது கணவரும் இருச்சக்கர வாகனத்தில் எனது கணவர் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து கொண்டு காஞ்சிக்குடிக்காடு விதைப்பண்ணையில் இருந்து நெம்மேலி போகும் ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்றுக்கொண்டிருந்தபோது அந்த வளைவை கடந்து நாங்கள் சென்றபோது எதிர்திசையில் வந்த டாடாஏசி வாகனம் மிகுந்த வேகத்துடன் வந்து நாங்கள் சென்ற இருச்சக்கர வாகனத்தை மோதிவிட்டு சிறிது தூரம் சென்று தள்ளி நின்றது. மேற்படி டாடாஏசி வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரி தான் விபத்து ஏற்பட்ட பிறகு வாகனத்தில் இருந்து இறங்கியவர் அக்கத்தில் பக்கத்தில் இருந்தவர்கள் வயலில் வேலை பார்த்தவர்கள் வந்தவுடன் அங்கிருந்து ஓடிவிட்டார். டாடாஏசி வாகனம் மோதியதில் எனது கணவரின் தலையில் டாடாஏசி வாகனத்தின் வலது பக்க கம்பி குத்தியதில் மூளை தெரிந்தது. எனக்கு காலில் மட்டும் சிறிய வீக்க காயம் ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் ஆம்புலன்சுக்கு போன் செய்து வரவழைத்தார்கள். சிகிச்சைக்காக எனது கணவரை ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு நானும் உடன் சென்றேன். காயம் பெரிய அளவில் இருந்ததால் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருந்து தஞ்சாவூர் மருத்தவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். தஞ்சாவூர் மருத்தவகல்லூரி மருத்துவமனையில் என் கணவருக்கு மூளையில் ஏற்பட்ட இரத்தகசிவு நிற்கவில்லை உடனடியாக அறுவை சிகிச்சை செய்தார்கள். அறுவை சிகிச்சை பிறகு தீவிர சிகிச்சை

பிரிவில் இருந்தவர் 5 நாட்கள் கழித்து இறந்துவிட்டார். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் . **மேற்படி புகார் வாக்குமூலம் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

*போலீசார் என்னை* தஞ்சாவூர் மருத்தவகல்லூரி மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் ஒரு L வடிவ வளைவு என்று சொன்னால் சரிதான். இந்த சம்பவம் எனக்கு, எனது கணவருக்கு மட்டும் தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். எனது வீட்டுக்காரர் டிரைவர் என்று சொன்னால் சரிதான். எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இருந்தது. போலீசார் என்னை விசாரித்தபோது நான் எனது கணவர் மீது டாடாஏசி வாகனம் மோதிவிட்டது என்று தான் சொன்னேன். அதில் கம்பி குத்தி காயம் ஏற்பட்டதாக சொல்லவில்லை.

போலீசார் விசாரணையில் நான் எந்த ஊரில் இருந்து எந்த காரணத்திற்காக சென்றோம் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். இருச்சக்கர வாகனம் எங்களுக்கு சொந்தமான வாகனம் இல்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் இரண்டு பக்கமும் இருபுறமும் பாலமும், கட்டையும் உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ இடமானது வளைவான பகுதியில் நடைபெற்றது என்று சொன்னால் பாலக்கட்டைக்கும், வளைவிற்கும் நடுவில்.

சம்பவத்தன்று எனது கணவர் ஓட்டுநர் உரிமமம் இல்லாமல் பழக்கம் இல்லாத வாகனத்தை ஓட்டி வளைவான பகுதியில் சரிவர விதிமுறைகளை பின்பற்றாமல் விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்றும், எதிரியின் செய்கையினால் இந்த விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன எனது கணவருக்கு நஷ்டஈடு கிடைக்க வேண்டும் என்பதற்காக எதிரி விபத்தினை ஏற்படுத்தினார் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து இந்த எதிரியினால் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.